ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1657/23 - 2010 ජූනි 09 වැනි බදාදා - 2010.06.09
*1657/23 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### *(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் கல்முனை மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்*

பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக, கல்முனை மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு திரு. எச். எம். எம். ஹரீஸ் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் கல்முனை மாநகர சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆள் ஒருவரை பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. மீராசாஹிபு முகம்மது நிஸார் என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது கல்முனை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. மீராசாஹிபு முகம்மது நிஸார் என்பவர், கல்முனை மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். எஸ். கே. பண்டார மாபா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கல்முனை மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2010, மே 31.

6 -543/1

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் கல்முனை மாநகர சபையின் மாநகர முதல்வரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக, கல்முனை மாநகர சபையின் மாநகர முதல்வரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

கல்முனை மாநகர சபையின் மாநகர முதல்வர் திரு. எச். எம். எம். ஹரீஸ், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் மாநகர முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்படவேண்டியவருமான கல்முனை மாநகர சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. செய்யது செயின் முகம்மது மசூர் மௌலானா என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது கல்முனை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. செய்யது செயின் முகம்மது மசூர் மௌலானா என்பவர், கல்முனை மாநகர சபையின் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். எஸ். கே. பண்டார மாபா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கல்முனை மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2010, மே 31.

6 -543/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.